# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>MCOP. No.191/2024</u>

2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20-ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.2 வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமராஜ் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>முதல் விசாரணை:</u>

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>:

சக்திவேல் மற்றும் நவீன் என்னுடைய உறவினர்கள் என்றால்சரியல்ல. விபத்து சம்மந்தமாக காவல்நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை. விபத்து சம்மந்தமாக நான் சக்திவேலுக்கு தகவல்கொடுக்கவில்லை. அடிப்பட்டவர்களுடன் நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. ஆம்புலன்சில் அனுப்பிவைத்தேன். விபத்தில் அடிப்பட்டவர்கள் எனக்கு பழக்கம் கிடையாது. இறந்துபோன நபர் வேலைக்கு செல்லும் போது நான் பார்த்துள்ளேன். நான் விபத்து சமயத்தில் திருச்சி – பெரம்பலூர் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்காக போனேன். எனக்கு முன்பு மோட்டார்சைக்கிள் சென்றுகொண்டிருந்தது. பஸ் பின்னால் இருந்து வந்தது. அது மெயின்ரோடு ஆகும். அந்த இடத்தில் வேறுவாகனங்கள் வரவில்லை. விபத்திற்கு பின்னர் சுமார் 10 அடி தள்ளி பஸ் நின்றது. விபத்து தார் ரோட்டில் நடந்தது. வெள்ளைக்கோடு அருகில் நடந்ததா

என்றால் இடதுபக்கம் இருந்த வெள்ளைக்கோடு அருகில் நடந்தது. மோட்டார்சைக்கிளில் சென்றவர்கள் பேருந்துக்கு முன்னால் சென்றதால் அவர்கள் சென்றதை என்னால் பார்க்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. மோட்டார்சைக்கிள் வலது பக்க Handleலில் பேருந்து மோதி விபத்து நடந்தது என்றால் சரிதான். மோட்டார்சைக்கிளில் 3பேர்கள் சென்றதால் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. நான் விபத்தை பார்க்கவில்லை என்றும், உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.